# அரசு எனதுகுடியியல் உரிமைகளை பறிப்பதற்காக புல்ஜன்ஸ் வழக்கில் என்னை சம்பந்தப்படுத்தியது

### — காமினி திஸநாயக்கா

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்டது போன்று எனது குடியியல் உரிமைகளையும் பறிப்பதற்கா

[4-ம் பக்கம் பார்க்க]

பருத்தித்துறை ... யாழ்ப்பாண ...

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 29 இதழ் 90
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 11 — 05 — 1992

## கண்ணியில் சிக்கி ராணுவ ஜீப் சிதறியது

(திருமலை)

திருகோணமலையில் புலிகளின் கண்ணிவெடியில் இராணுவ ஜீப் ஒன்று சிக்கிச் சிதறியது. இதில் மூன்று இராணுவத்தினர் பலியாகினர்.

நேற்றுமுன்தினம காலை திருகோணமலை பச்சைநூல்

(4ம் பக்கம் பார்க்க)

## பவள் வெடித்தது

(அம்பாறை)

அம்பாறையில் சிறிலங்கா அதிரடிப்படையின் பவள் கவச வாகனமொன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் விகாரமலை என்ற காவலரணுக்கு ஜீப்வண்டி ஒன்றிலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற தெரிவுக்குழு

# இனப்பிரச்னைக்கான தீர்வை

# எதிர்வரும் 19-ல் அறிவிக்கும்

(கொழும்பு)

**இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அரசினால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்வுக்கான தனது முடிவு குறித்து இம்மாதம் 19ம் திகதி அறிவிக்கவுள்ளது.**

தெரிவுக்குழு தலைவர் திரு. மங்கள முனசிங்க தலைமையில் நடைபெறும் கூட்டத்திலே தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு இம்முடிவு பற்றி அறிவிக்க படவுள்ளது

பல அரசியல் கட்சிகள் தெரிவித்த யோசனைகள் தொடர்பாக கடந்த சில மாதங்களாக தீவிர சலந்துரையாடலில் ஈடுபட்ட தெரிவுக்குழு தனது இறுதி முடிவை குழு உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்த உள்ளது குறிப்பிடத்தக்கது. (ரி)

## இலங்கையின் சனத்தொகை

(கொழும்பு)

21-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் சனத்தொகை 2 கோடி 50 இலட்சமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## பிலிப்பைன்ஸில் இன்று ஜனதிபதித் தேர்தல்

(மணிலா)

பிலிப்பைன்ஸில்இன்று ஜனதிபதி, உட ஜனதிபதி, நாடாளுமன்றசெனட், காங்கிரஸ் என தேசிய அளவிலான பதவிக

(4-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி படுகொலைகள்: சர்வதேச அரங்கிற்கு தெரியப்படுத்த ஏற்பாடு

(கொழும்பு)

தென்பகுதியில் அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும் அரசியல் படுகொலைகள் குறித்து சர்வதேச அரங்கிற்கு தெரியப்படுத்த எதிர் கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சுதந்திரக் கட்சி எம். பி. திரு. மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் அரசியல் கடத்தல்கள், படுகொலைகள், கைதுகள் குறித்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமைப்பீடம் (ஜெனிவா), சர்வதேச மன்னிப்புச்சபை லண்டன்) மற்றும் பல்வேறு உலகதொண்டர் ஸ்தாபனங்களுக்கும் ஆதார பூர்வ தகவல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் திரு. ராஜபக்ஸ தெரிவித்தார்.

இதுகுறித்து எதிர்க்கட்சிகள் பல விபரங்களை திரட்டியுள்ளன. (சி)

## க.பொ.த.(சா) விசேடபரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

1990-ம் ஆண்டு மாணவர்களுக்காக வடமாகாணத்தில் விசேடமாக நடாத்தப்பட்ட க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை முடிவுகள் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்.மாவட்டத்தில் வெளியானது

இம்முறை யாழ். நகரிலுள்ள முன்னணிக் கல்லூரிகளில எட்டுப் பாடங்களிலும் எந்த ஒரு மாணவரும் விசேட சித்தி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் சங்கீதப் பரீட்சை முடிவுகள் வெளியாகவில்லை. ஆனல்! சித்திரப் பாடத்தில் இம்முறை பெரும்பாலான மாணவர்கள் சித்தி அடையவில்லையென்றே கூறப்படுகின்றது.

[4ம பக்கம் பார்க்க]

## சகல துறைகளிலும் பிரகாசித்தவர் பேராசிரியர் சிவத்தம்பி

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சிவத்தம்பியின் ஆளுமை பல்கலைக் கழக மட்டதுக்கு அப்பாலும் சென்று, சமூகத்தின் சகல அம்சங்களிலும் தென்படுகிறது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, நல்லூரில் நடைபெற்ற பேராசிரியர் கா.

(4.ம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் குழு மட்டுநகர் விஜயம்!

(மட்டுநகர்)

மட்டுநகரில் மனிதஉரிமை குழு பணியகம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்காக நோர்வே மனித உரிமைகள் குழுவைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் கடந்த புதன்கிழமை மட்டுநகருக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் மட்டுநகரில் மனிதஉரிமைகள் குழு பணியகம் அமைப்பது தொடர்பாக அரச உயர்அதிகாரிகள், மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்களுடன் கலந்தாலோசனை நடத்தினர்கள். (ரி)

## 29 தொண்டர் ஆசிரியர் மட்டுநகரில் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 4 ம் திகதி முதல் மேலும் 29 பேருக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மட்டுநகர் நிர்வாக உதவிக் கல்விப்பணிப்பாளர் சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான ஏ. பி. பட்டியலிலிருந்து மேலும் 100 பேருக்கு நேர்முகபரீட்சை நடாத்தப்பட்டு அதில் 76 பேரின பட்டியல் அனுமதிக்காகவடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## நான்கு தமிழ் பெண்கள் பொலிஸாரால் கைது

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் ஒரே வீட்டில் நான்கு தமிழ் பெண்கள் பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

கடந்த 5ம் திகதி காலை களுவாஞ்சிக்குடி பொலிஸார் 8ம் வட்டாரப்பிரதேசத்தை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினார்கள்.

இத்தேடுதலின் போது ஒரு வீட்டிலிருந்த நான்கு பெண்களை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இந்தப் பெண்களில் மூவர் மாணவிகளாவர் நல்லதம்பி நாகலஷ்சுமி (40 வயது) பு யசோதினி (19 வயது), பு. தேவித்திரி (17 வயது), க. வெஸ்மதி (20 வயது) ஆகிய நான்கு பெண்களுமே பொலிஸாரால் பிடித்துச் செல்லப் பட்டவர்களாவர்.

இவர்களில் யயோதினி, தேவித்திரி ஆகியோர் சகோதரகளாவர். (ரி)

## அரசியல் சட்டத்தை விட சட்டமன்றம் உயர்ந்ததல்ல!

(சென்னை)

நாடாளுமன்றங்களும் சட்ட மன்றங்களும் அரசியல் சட்டத்தின்படி ஏற்பட்ட அமைப்புகளாகும். அவை அரசியல் சட்டத்தைவிட உயர்ந்தவையாகிவிடமுடியாது என்று சுப்பிரமணிய சுவாமி நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களிடையே பேசும்போது குறிப்பிட்டார்.

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

கிறீன் சியஸ் ரெயிலறிங் ஸ்தாபனத்திற்கு உடுப்புகள் தைக்கக்கூடிய ஆண்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்: கிறீன் சியஸ் ரெயிலறிங், மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி 6255)

### பரிசு நூல்

பரிசளிப்பதற்கேற்ற சாகித்தியமண்டல பரிசுபெற்ற நூல், அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30/- மாணவர்களும் நடிப்பதற்கேற்ற 10 நாடகங்கள். ஒரு கட்டுரை. [சி–6241]

### ENGLISH TUTION

For Individual and House visits by retired Govern--ment Servant. Contact 204, Manipay Road, Otumadam Jaffna on Sundays between 8-00 a. m and 10-00 a m (C 6217)

### வெளிவந்துவிட்டது

சமூகக்கல்வி ஆண்டு 7 துரித மீட்டலுக்கான வினாவிடை. ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு:- சோதி வெளியீட்டு வாரியம் ஏகவிநியோகஸ்தர்கள்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை 234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். விலை 20 - மட்டுமே. (சி–2121)

### மணமகள் தேவை

சவூதியில் டெக்னீசியனாக தொழில் புரிந்து விட்டு யாழ். திரும்புகிற, இந்து 38 வயது ஆயிலியம் செவ்வாய் குற்றமற்ற மகனுக்கு பெற்றோர் 33 வயதிற்குட்பட்ட பொருத்தமான துணையை தேடுகிறார்கள் முதல் கடிதத்திலேயே முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. சி - 6281 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-6281)

### சங்கீதம் வினாவிடை

தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா ஆண்டுகள் 6, 7, 8, 9 மற்றும் வட இலங்கைச் சங்கீத சபையின் தரம் 2 பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. வெளியிட்டோர்: நடுவுத்துருத்தி, நல்லூர்ச்சந்தை, கிடைக்குமிடம்: ஸ்ரீ காந்தா புத்தகசாலை 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6285)

### வைத்திய சேவை

வியர்வைப் பருக்கள், முகப் பருக்கள், சதை வளர்ச்சி, தலைமயிர் வளர, கழலைக்கட்டி, தலைமயிர் நரை மாறுவதற்கு, வாதம், நரம்புத் தளர்ச்சி, தேமல், வெண்குஷ்டம், மாதவிலக்குக் கோளாறுகள், செய்வினை, சூனியம், பிணிதோஷம் போன்ற வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். வேளாங்கண்ணி வைத்தியர், எம். கருணாதரன், வேளாங்கண்ணி வைத்தியசாலை 616, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி6271)

### ஜோதிட விஞ்ஞான கணிப்புகள்

வெள்ளிதெசையால் பிரேமதாசா ஆயுட்கால ஜனாதிபதி. அஷ்டமத்துப் புதன் தெசையால் ஸ்ரீமாவோவுக்கு அரசியல் அஸ்தமனம் நீசச்செவ்வாய் தெசையால், ஈழத்தமிழர் பிரச்சனையிலும், தடைசெய்வதிலும் ஜெயலலிதாவுக்குக் தோல்வியும் பதவியில் சரிவும், மத்திய காங்கிரஸ் ஆட்சி உரியகாலம் முடிவதற்கிடையில் கவிழும், செவ்வாய் மாற்றம் ரூ. 7/- சோபிதா, யாழ்ப்பாணம். Prof. சத்தியதாஸன். (சி-6278)

## இராசி பலன்

**11/05/1992**

**திங்கட்கிழமை**

**(தமிழுக்கு சித்திரை 29)**

நவமி காலை 6-41 வரை, தசமி பி. இ. 4-30 வரை, சித்தயோகம், பூரம் பி. இ. 2-46 வரை. இராகு காலம் 7-24 முதல் 8-54 வரை. சுப நேரம் காலை 11-54 முதல் 1-24 வரை.

மேடம்; வருவாய் பாதிப்பு, உறவினர் சினம், குடும்ப யோசனை.

இடபம்; தாமதமான வெற்றி, திடீர் செலவு, எச்சரிக்கை தேவை.

மிதுனம்: தடைகள் நிவர்த்தி, சுபகாரியம், பயணம்.

கடகம்: கருத்துவேறுபாடு, ஏமாற்றம், மனவேதனை.

சிங்கம்: புதியதிட்டம், பண வரவு, காரியசித்தி.

கன்னி: எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றம், சாமர்த்தியம், குடும்ப நன்மை.

துலாம்: மனிதநேயம், தொழில் நஷ்டம், அலைச்சல்.

விருச்சிகம்: போட்டிகளில் வெற்றி, இனசன உறவு, சுப காரியம்.

தனுசு: உடல் உபாதை, ஒதுங்கி வாழ்தல், மனச்சஞ்சலம்.

மகரம்: சிறி குழப்பம். கருத்துமுரண்பாடு, யோசனை.

கும்பம்: பெண் உதவி, தெய்வீக சிந்தனை, பாராட்டு.

மீனம்: அதிக வேலைப்பளு அதிகாரிகள் உதவி, பொதுப் பணி.

ஜோஸ்யர்

## மின்னல்தாக்கி பசுமாடு பலி

[யாழ்ப்பாணம்]

புங்கங்குளச் சந்திக்கு அருகாமையில் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடு ஒன்று கடந்த புதன்கிழமை மின்னல் தாக்குதலுக்கு பலியாகியுள்ளது. [59]

## 15 பேர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் மதுக்கடை ஒன்றின்மீது சீக்கியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 15 பேர் பலியானார்கள், 20 பேர் படுகாயமடைந்தனர்.

இறந்தவர்களில் அநேகர் இந்துக்கள் எனவும், மதுக்கடைகள் திறக்கப்படுவதை சீக்கியத் தீவிரவாதிகள் எதிர்த்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்தும் உதைபந்தாட்ட போட்டியின் 2ம்சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்; அல்வாய் சிவானந்த அணியை எதிர்த்து நவசக்தி அணிமோதும். இப்போட்டி நெல்லியடி ம.ம.வியல் நடைபெறும்.

## தமிழீழ காவல்துறை வெற்றிடங்கள்

### காவலர் தரம்

**தகைமைகள்:**

1. எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருக்கவேண்டும்.
2. தமிழில் நன்கு எழுத, வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

உயரம்: 5' 6''

திருமணமாகாமல் இருத்தல் நன்று.

வயதெல்லை: 18 தொடக்கம் 30 வரை.

### சிறைக்காவலர்

**தகைமைகள்:**

1. எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.
2. தமிழில் நன்கு எழுத, வாசிக்கத் தெரிந்திருக்க வேணடும்.

உயரம்: 5' 6''

திருமணமாகாதிருத்தல் நன்று.


வயதெல்லை: 18 தொடக்கம் 30 வரை.

மேற்படி விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களுடன் 12-05-92 செவ்வாய்க்கிழமை காலை 8-00 மணிக்கு தமிழீழ காவல்துறை தலைமைச்செயலகத்திற்கு நேரடியாக சமுகந்தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை,
10-05-92

(எ-2132)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கணபதிப்பிள்ளை கந்தையா

(இரத்தினம் விதானையார்)
(இளைப்பாறிய கிராமத்தலைமைக்காரன்)

தோற்றம்: 20-08-1910 — மறைவு: 11-04-1992

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
எல்லோருக்கும் ஆதரவாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து, எம்மை
எல்லாம் வாழ்வாங்கு வாழவைத்த ஐயாவே!
தாங்கள் வகுத்த வழி செல்கையிலே
பாதிவழியில் எம்மை விட்டு சென்றதேனோ?
காலனவன் கவர்ந்து சென்றானே!
கண்கள் குளமாக கலங்குகின்றோம்! உங்கள்
இழப்பு ஈடுசெய்ய முடியாது தவிக்கின்றோம்
தங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெருமக்கள், மைத்துனன்,
சகோதரி, மைத்துனி, சகலன், மாமி.

நாகர்கோவில் தெற்கு,
நாகர்கோவில். (எ 2128)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அப்பாப்பிள்ளை நடராசா

(உபஅதிபர் - பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

ஜனனம்: 28-12-1931 மறைவு: 23 04-1991

திதி: 11 05 199

ஆண்டொன்று சென்றதையா – ஆனாலும்
எம் உள்ளத்தில் என்றும்
ஒளிவீசும் தெய்வமாக நிலைத்து நிற்கும்
எங்கள் அன்புத்தந்தையை என்றும்
பூஜிக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
மனைவி: ஆனந்தீஸ்வரி
மகள்: செல்வராசா அருந்ததி (பிரான்ஸ்)
மகள்: ந. சுமதி
மகன்: ந. சபேசன் (பிரான்ஸ்)
மகன்; ந. கணேசன்
மருமகன்: நா. செல்வராசா (பிரான்ஸ்)

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம். [சி-6286]

# யாழ். ஆயர் மேதகு வண. வ. தியோகுப்பிள்ளை

## ஆண்டகை அவர்களின்

# ★ வெள்ளி - பொன் - பவள ★

# மும்முடி விழா சிறப்பு மலர்



## பல்வேறு வகைப்பட்ட ஆற்றல், ஆளுமை மிக்கவர்

**எஸ். சிவலிங்கராஜா, எம். ஏ.**
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**யாழ்.** ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பழம் பெருமை வாய்ந்த ஊர்காவற்றுறையிலே மரியாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளைக்கும், அந்தோனிப்பிள்ளை இன்னேசியாப்பிள்ளைக்கும் மகனாக 0[illegible]-04-1917 இல் பிறந்தார்.

காம்பொன்னில் உள்ள ரோமன் கத்தோலிக்கத் தமிழ்ப் பாடசாலை, சாவலூரில் உள்ள புனித அந்தோனியார் கல்லூரியிலே ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பின்னர் யாழ். புனிதபத்திரிசியார் கல்லூரியிலே பயின்றார். நன்மாணாக்கனாகவும், விவேகியாகவும் திகழ்ந்த இளைஞன் தியோகுப்பிள்ளையின் மனம் குருத்துவ வாழ்க்கையில் நாட்டமடையத் தொடங்கியது.

உயர்தரக் கல்வியைத் தொடர்ந்து புனித மாட்டீனார் குருமடத்திலும், உரோமையிலுள்ள விசுவாச பரப்புதல் கல்லூரியிலும் பயின்றார். மெய்யியல், இறையியல், முதலியதுறைகளிலே பட்டங்கள் பெற்றார்.

உரோமையில் படிக்கும் போது ஏனைய நாட்டுக் குருக்களைவிட மிகவும் சிறந்த குருவாக, புத்திவிவேகம் உடையவராகத் திகழ்ந்தார்.

22-12-1941 ஆம் ஆண்டு கர்தினால் டி மோ சோனி பியோச்சி என்பவரால் இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பெற்றார்.

பின்னர் மெய்யியலில் சிறப்புப் பட்டமும் இறையியலில் கலாநிதிப் பட்டமும் திருச்சபைச் சட்டத்தில் இளங்கலைப் பட்டமும், லண்டன் பீ.ஏ. பட்டமும், கல்வியில் டிப்ளோமா (இலங்கை) பட்டமும் பெற்றுக் கல்விமானாக ஈழத்தின் முன்னணிக் கல்லூரிகளில் பணியாற்றினார்.

யாழ். பேராலயப் பங்கின் துணைப் பங்குத் தந்தையாகக் கடமையாற்றியபின் கல்விப் பணியோடு தன்னை இணைத்துக்கொண்டார். அநுராதபுரம் புனித. வளனார் கல்லூரியில் ஐந்து ஆண்டுகளும் (1946-1951). கரவெட்டி திரு இருதய ஆண்டவர் கல்லூரியில் இரண்டு ஆண்டுகளும் (1951-1953) தொடர்ந்து இளவாலை புனித என்றியரசர் கல்லூரியில் மூன்று ஆண்டுகளும் [1954-1956] கல்லூரி முதல்வராகப் பணிபுரிந்தார்.

கொழும்புத்துறை புனித. வளனார் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபராக [1956-1963] இவர் பணியாற்றிய காலம் இவரது கல்விப் பணியின் உச்ச நிலையாகக் கருதத்தக்கது. அறிவு, ஒழுக்கம், பணிவு முதலிய நற்குணமுடையவர்களாக ஆசிரியர்களைப் பயிற்றுவதில் இவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். இவர் காலத்தே பயிற்சி பெற்ற, பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இவரின் பணியை, உழைப்பை, நேர்மையை, உற்சாகத்தை இன்னும் வியந்து பாராட்டுகின்றனர்.

1967-ம் ஆண்டு மே மாதம் பதினொராம் திகதி திருகோணமலை, மட்டுநகர் ஆயர் இக்னேசியஸ் கிளெனிக்குத் துணை ஆயராகத் திருநிலை செய்யப்பெற்றார். துணை ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் பணி பன்முகப்பட்டதாக அமையத்தொடங்கியது.

பொதுசனத் தொடர்பினைப் பேணக் கருதிய ஆயர் தொண்டன் என்னும் பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். தொண்டன் பத்திரிகையில் இவரது கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய ஆக்கங்கள் பல இடம்பெற்றன. ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்புக்குச் செழுமையூட்டும் ஞானப்பள்ளு, அர்ச். யாகப்பர் அம்மானை முதலியவற்றிலே மிகுந்த ஈடுபாடும் புலமையும் உள்ளவர். அம்மானைப் பாடல்களை இசையுடன் பாடும் வல்லமை கொண்டவர்.

திருமலை, மட்டுநகர் துணை ஆயராகப் பணிபுரிந்த மேதகு ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் 18-12 1972 யாழ். மறை மாவட்டத்தில் ஆயராக பதவியேற்றார்.

தமிழர் தம் பழக்கவழக்கப் பின்னணியில் குருத்துவப் பயிற்சியும் நடைபெறவேண்டும் என்று விரும்பிய ஆண்டகையவர்கள் 1980 ம் ஆண்டு கொழும்புத்துறையிலே புனித பிரான்சிஸ் சேவியர் குருத்துவக் கல்லூரியை உருவாக்கியுள்ளார். இங்கு மேலைத்தேய கீழைத்தேய மெய்யியல் சாத்திரங்களும் பகவத்கீதை, சைவசித்தாந்தம், தேம்பாவணி. இரட்சணிய யாத்திரிகம் முதலிய பாடங்களையும் கற்பிக்க ஒழுங்கு செய்தமை இவரது பரந்த நோக்கத்தினையே காட்டுகின்றது. ஈழத்தில் தமிழ்க்குருக்களுக்கென உள்ள ஒரே குருத்துவக் கல்லூரி இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மறைப்பற்றும் தமிழ்ப்பற்றும் விரவிக் காணப்படும் ஆயர் அவர்கள் தாயுமானவர் பாடல்கள், சிலப்பதிகாரம். தேம்பாவணி, திருச்செல்வர் காவியம், பள்ளு அம்மானை முதலியவற்றிலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

தமிழுக்குத் தொண்டாற்றிய கிறிஸ்தவ அறிஞர்களிலே மிகுந்த பற்றுடையவர். சுவாமி ஞானப்பிரகாசர், வண. தனிநாயகம் அடிகளார். வண. தாவீது அடிகளார் முதலியோரிடத்து மிகுந்த கரிசனை காட்டுபவர். அவர்களைப் பற்றிய ஆய்வுகள் பூரணமாக வெளிவர வேண்டும் என்று அவாவுறுபவர்.

தமிழ்மொழியோடு தொடர்புடைய, தமிழர் தம் கலைகளிலே சிறப்பாக ஈழத் தமிழர் கலை வடிவங்களைப் பேணுவதிலே மிகுந்த அக்கறை காட்டி வருபவர். அண்மைக் காலங்களாக திருமறைக் கலாமன்றம் நிகழ்த்திவரும் கலை நிகழ்ச்சிகள் ஆயர் அவர்களின் ஊக்குவிப்புக்களின் விளைவே என்று கருதமுடிகின்றது.

கல்வியிலும், ஆராய்ச்சியிலும், கலைகளிலும் ஈடுபட்டு உழைப்போருக்கு கைகொடுத்து உதவும் மாண்புமிகு ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்கள் நல்லதொரு பதிப்பாசிரியருமாவர்.

பல்வேறு வகைப்பட்ட ஆற்றலும் ஆளுமையும் மிகக ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்களின் பணிகள் தொடர வாழ்த்துவோம்.

### ஆயர் அவர்கள் எழுதிய சில நூல்கள்

1. **மாணவர் கிறிஸ்தவ போதகம்:** விசுவாசப் பிரமாணம்– முதலாம் காண்டம். அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம் 1957, பக். 1-162
2. **மாணவர் கிறிஸ்தவ போதகம்:** கிறிஸ்தவ ஒழுக்கம் – இரண்டாம் காண்டம், அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம் – யாழ்ப்பாணம் 1963, பக். 1 - 262
3. **மாணவர் கிறிஸ்தவ போதகம்:** கிறிஸ்தவ வழிபாடு - மூன்றாம் காண்டம். அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம் 1963, பக். 1 - 241.

ஆயர்அவர்கட்கு காணிக்கையாக்கப்பட்ட நூல்கள்:

1. வித்துவான் ச. அடைக்கலமுதது (அமுது):

★ நெஞ்சே நினை, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வாழ்க்கை வரலாறு. வெளியீடு: யாழ். மறை

(4-ம் பக்கம் பார்க்க)

## திருத்தந்தையிடமிருந்து யாழ். ஆயருக்கு வாழ்த்து

யாழ். ஆயர் பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு அவரது குருத்துவ பொன்விழாவையொட்டி திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் பின்வரும் வாழ்த்துக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

வணக்கத்துக்குரிய சகோதரரே! முன்புபோலவே இன்றைய காலத்தில் இன்னும் அதிகமாக அண்மையில் நிகழவிருக்கும் உங்கள் குருத்துவ அபிஷேகத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை நினைவு கூர்வது தக்கதேயாம். மலரும் இளமைப்பருவத்தை இங்குரோமாபுரியில் நீங்கள் கழித்தது [illegible]. மானிட மறையியல் பயிற்சிகளைப்பெற்று, அவற்றின் உதவியுடன் மறைப்பணியை ஆரம்பிப்பதற்குவேண்டியவழி துறைகளையும் ஆதாரத்தையும் அடைந்துகொண்டதும் இந் நினைவு கூர்தலில் அடங்கும்.

நாம நன்கு அறிந்துள்ளபடி இறைவனின் இந்தப்பணிக்களமானது பல்லாண்டுகாலமாக நற்செய்திப் பணியாளர்கள் விதைத்த விதையிலிருந்து சிறந்த அறுவடையைத்தரும் என்ற நம்பிக்கையை அளித்தது. இறைவனின் உதவியுடன் உங்கள் பற்றுர்வமுள்ள விடா முயற்சியின் பலனாக அது இன்னும் மிகுந்த பலன்தரக்கூடிய தான வளம் பெற்று விளங்குகிறதெனக் கருதுகிறோம்.

திருச்சபை நிறுவனங்களையோ முற்றும் அப்பாவிகளான மக்களையோ பொருட்படுத்தாத, குமுறும் உள்நாட்டுப்போரினால் விசுவாசிகளுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல், இடையூறுகள் எமக்குத் தெரியாததொன்றல்ல.

வணக்கத்துக்குரிய சகோதரரே, உங்கள் பெருவிழா அடுத்திருக்கும் இவ்வேளையில் இந்த அழிவுகளைப்பற்றிக் குறிப்பிடுவதற்கு மிகவும் மனம்வருந்துகிறோம். இறைவன் உங்கள்மட்டிற் காட்டிய பெருந்தயவையும், திருச்சபையின் முன்னேற்றத்தையும் உங்களுடன் எண்ணிப் பார்ப்பதே எமது விருப்பம். ஆனால் உங்களுடன் முற்றும் இணைந்திருக்கவேண்டுமென்ற விருப்பத்தால் உங்கள் துயரங்கள் கவலைகளைப் பகிர்ந்துகொள்ள விழைகின்றோம்.

ஆகவே எமக்கிடையே நெடுந்தூரம் இருந்த போதிலும் உங்களது பொன்விழாவை நீங்கள் கொண்டாடுகையில், உள்ளத்திலும், ஆன்மாவிலும் இசைவுடன் பாராட்டுவோர், உங்கள் உழைப்பின் அடையாளமான நினைவுச்சின்னங்களைக்கொண்ட திருச்சபை சமூகத்தைப் பேணி வளர்ப்பதில் நீங்கள் செலவிட்ட பல ஆண்டுகளுக்கு சான்றாக உள்ள அனைத்தும ஒன்றுசேர உங்களைப் பாராட்டுவது போல இது அமையும்.

ஒரு பற்றுமிக்க பாதுகாவலராக ஞானத்துடனும் அறிவாற்றலுடனும் நீங்கள் ஆண்டுவரும் மக்கள் மத்தியில் நீங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர் என்பதை நாம் மறந்துவிட முடியாது

இறுதியில் தெய்வீக ஆயர் பரலோக வரங்களை உங்கள் மீது ஏராளமாகப் பொழிந்தருளவேண்டுமென்று அவரை இறைஞ்சுகின்றோம். உங்களது கடந்தகால உழைப்புக்கு அவரே தக்க வெகுமானத்தை அளிப்பாராக அதேவேளையில் வணக்கத்துக்குரிய சகோதரரே! உங்களுக்கும் நற்செய்திப் பணியாளர் அனைவருக்கும் முழுச்சமூகத்திற்குமே எல்லோருக்கும் ஆறுதலளிக்கும்படியாக தாராளமாக எமது அப்போஸ்தல ஆசியை அளிக்கின்றோம். அது எமது பொது ஒருமனப்பாட்டின் அடையாளமாக இருப்பதாக.

இது வத்திக்கான் நகரில் கிறிஸ்து ஆண்டு 1991 நவம்பர் 28ஆம் நாள் எமது ஆட்சியின் 14வது ஆண்டில் அளிக்கப்பட்டது.— 2-ம் அருள் சின்னப்பர்

---

வெள்ளி பொன் பவள

மும்முடி விழா நாயகர்

**மேதகு வண. வ. தியோகுப்பிள்ளை**

**ஆண்டகை அவர்களை**

**யாழ். மறை மாவட்டம் மகிழ்ச்சியுடன் வாழ்த்தும் எழுச்சிமிகு நிகழ்ச்சி (11-05-92)**

மாதவ முனிவர் மனங்கவர் தலைவர்
திருமறையின் காவலன்
தீந்தமிழின் பாவலன்

**யாழ். புனித மரியன்னை பேராலய முன்றலில்**
**இன்று 11ம் திகதி மாலை 4-00 மணி**

இறை புகழ் ஓங்குக - நம்
இனத் துயர் நீங்குக.

# புலிகளை தடைசெய்வதில் இந்தியாவுக்கு தயக்கம் கிடையாது

## அமைச்சர் சிதம்பரம்

(புதுடில்லி)

இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்வதில் மத்திய அரசுக்கு எது வித தயக்கமும் கிடையாது என மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று பத்திரிகையாளரிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதில் சட்டப்பிரச்னை இருப்பதால் இது விடயம் குறித்து மத்திய அரசு கவனமாக செயற்பட்டு வருவதாகவும் எனினும் இன்னும் ஓரிரு நாட்களில் இதன் முடிவு அறிவிக்கப்பட்டுவிடுமென்றும் தெரிவித்தார். (க)

# சிங்கள, முஸ்லிம் குடியிருப்புகள் மத்தியில் 150 தமிழ் குடும்பங்கள் பலவந்தமாக குடியேற்றம்

(அம்பாறை)

சிங்கள முஸ்லிம் குடியிருப்புகளால் சூழப்பட்டுள்ள அம்பாறை வீரமுனைக் கிராமத்தில் 150 தமிழ் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

அகதி முகாம்களில் தங்கியிருந்த வீரமுனை தமிழ் மக்கள் சுயவிருப்பமின்றி அரச படையினரதும் அதிகாரிகளினதும் அச்சுறுத்தல்களினாலும் அங்கு குடியமர்ந்தனர்.

கடந்த காலங்களில் முஸ்லிம்களும இராணுவத்தினரும் நடத்திய வன்முறைகளினாலும் வீரமுனை தமிழ் கிராமம் அழிக்கப்பட்டது.

வீரமுனை கிராமத்திற்கு சுற்றியுள்ள தமிழ் கிராமங்களில் முஸ்லிம்களும் சிங்களவரும் அரசாங்கத்தினால் குடியமர்த்தப்பட்டனர்.

மட்டக்களப்பிற்கும் அம்பாறைக்கும் அண்மையில் சென்ற சர்வதேச அமைப்புகள் இந்தக் குடியேற்ற நடவடிக்கை ஒரு இனத்திற்கான நிலச்செறிவாக்கத்தை குறைப்பதாகும் என்று குற்றம்சாட்டின

இதன்பின்னர் குடியேற்ற திட்டங்கள் சகல இனங்களுக்குமானது எனக்கூறி சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஓரிரு தமிழ் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றன

வீரமுனையில் தமிழர்களுக்கான இருப்பிடங்கள் எதுவும் ஏற்ற நிலையில் இல்லை வெறும் கொட்டில்களிலே இங்குள்ள தமிழர்கள் தங்கியுள்ளனர்.

தமிழருக்கு போதிய நிவாரணமும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை தமிழர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவென இங்குள்ள பாடசாலையொன்றில் நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இப்பொலிஸார் தமிழர் மீது தொடர்ந்து வன்முறையைப் பிரயோகித்து வருவதினால் இங்குள்ள தமிழர்கள் பதற்றத்துடன் வாழ்ந்து வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ரி)

# இலங்கைக்கான உதவியை

## சர்வதேச நிறுவனம் நிறுத்தம்

(டோக்கியோ)

இலங்கைக்கான உதவியை நிறுத்தப்போவதாக சர்வதேச தொண்டர்ஸ்தாபனமொன்று அறிவித்துள்ளது.

இதுகுறித்து 'ஏ. ஆர். ஸி' எனப்படும் இந்த உதவி நிறுவனத்தின் தலைவர் திரு. ஹெபேட் வைற் ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதர் திரு சிற்றம்பலம் மகேந்திரனுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

சர்வோதயத்திற்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை குறித்தும் இந்த அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. (சி)

# மன்னார்தீவில் முஸ்லிம் சிங்கள குடியேற்றம்

(மன்னார்)

மன்னார்தீவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் முஸ்லிம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

சிலாவத்துறை-அரிப்பு-முள்ளிக்குளம், பூக்குளம் பகுதிகளில் கடற்கரைப் பகுதியை அண்டிய பிரதேசத்தில் சிங்களவரும் எருக்கலம்பிட்டி-தாராபுரம் ஆகிய கிராமங்களில் முஸ்லிம குடும்பங்களும் இருப்பதாக யாழ். வந்த மன்னார் வாசிகள் தெரிவித்தனர். (59)

# உதைபந்தாட்டப் போட்டி

[யாழ்ப்பாணம்]

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டிய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று திங்கள் பி. ப.3மணிக்கு யாழ் தொழில் நுட்பக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய போட்டிகள்:யங் ஹென்றீஸ் எதிர் குருயல்[பி], சென் லூட்ஸ் [தொடர்மாடி] எதிர் வணயகர்

### க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் நகரின் மத்தியிலுள்ள பாடசாலைகளின் பேறுபேற்றின் பரீட்சையில் விசேட சித்தியடைந்தோர் பற்றிய விபரம் பின்வருமாறு:

| பாடசாலைகள் | 8D | 7D | 6D | 5D |
|---|---|---|---|---|
| சுண்டுக்குழி மகளிர் கல்லூரி | 00 | 06 | 05 | 05 |
| சென். ஜோன்ஸ் கல்லூரி | 00 | 03 | 04 | 04 |
| சென பற்றிக்ஸ் கல்லூரி | 00 | 00 | 02 | 02 |
| ஆங்கில தி. கு க. மடம் | 00 | 00 | 02 | 03 |
| வேம்படி மகளிர் கல்லூரி | 00 | 01 | 12 | 12 |
| யாழ். மத்திய கல்லூரி | 00 | 00 | 01 | 06 |
| யாழ் இந்துக்கல்லூரி | 00 | 14 | 21 | 19 |
| யாழ். இந்து மகளிர் கல்லூரி | 00 | 04 | 08 | 20 |

(வி-சு)

# புதிய சங்கம்

(வேலணை)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேசசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் புதிய சங்கமொன்றினை ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளனர்.

# வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் 2-ஆம் லெப்டினண்ட் மாவி (நாகலிங்கம் பகீரதன் மீசாலை தெற்கு) வீரச்சாவை தழுவிக்கொண்டார் இவருக்கு விடுதலைப் புலிகள் தங்கள் வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

# விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு முதற்கலைத் தேர்வு, வர்த்தகத் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முடிவு திகதி யூன் மாதம் 20ம் திகதி என வெளிவாரிப் பட்டப்படிப்பு இணைப்பாளர், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

### அரசியல்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தற்போது உயர் நீதிமன்றத்துக்கும், தமிழ்நாடு சட்டப் பேரவைக்கும் இடையே எழுந்துள்ள பிரச்னை குறித்து அவர் இக்கருத்தினை வெளியிட்டார்.

அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் அரசியல் அமைப்பின் அடிப்படை சட்டத்தின பகுதிகளாகும். உரியசட்டமுறைமைகளின்படி இல்லாமல் யாரும் சிறையிடப்பட்டால் அதைப்பற்றி விசாரிக்க நீதிமன்றங்களுக்கு உரிமையுண்டு என்றும் அங்கு பேசும்போது அவர் மேலும் தெரிவித்தார். (சே)

# இந்திய அதிகாரி சுட்டுக் கொலை

(புதுடில்லி)

விலைபொருள் செலவு மற்றும் விலைகள் கமிசனின் தலைவர் டாக்டர் பி எச். கிளாசி நேற்றுக்காலை தெற்கு டில்லியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தீவிரவாதிகளே இக்கொலையை செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

ஸ்கூட்டரில் வந்த இரு இளைஞர்கள் றிவோல்வரால் இவரை சுட்டுவிட்டு தப்பியோடி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (மக)

# எறிகணைகள் செலுத்திகள் புலிகளால் மீட்பு

(மட்டக்களப்பு)

கடந்த 9ம் திகதி மட்டக்களப்பு கதிரவெளியில் மோதல் இடம்பெற்ற இடத்தில் நேற்று முன்தினம் தடைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் 60 மிலலி மீற்றர் எறிகணை செலுத்தி ஒன்றை கைப்பற்றியுள்ளனர்

மோதல் இடம்பெற்ற போதும் கதிரவெளியில் விடுதலைப் புலிகள் 81 மில்லி மீற்றர் எறிகணை செலுத்தி ஒன்றையும் மீட்டனர்.

# தையல் பயிற்சி வகுப்பு

(நெல்லியடி)

கரவெட்டிப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தினால் இலவச தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது

இத்தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற விரும்புவோர் நெல்லியடியிலுள்ள கரவெட்டி செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் [61]

### ஆயர் அவர்கள் எழுதிய

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்ட இலக்கியக் கழகம், 1975, புனிதவளன் அச்சகம், யாழ்ப்பாணம்.

2. N. M. SAVERI, The Life and Times of Ovazio Battecdhini Roma 1980.

3. A. J. V. CHANDRAKANTHAN: Church in an Emergent State Eccl sial Co textualisation in Sri Lanka. Colombo 1991

4 கவிஞர் தேவதாசன்:

★ காத்தவன் காவியம் வெளியீடு; யாழ். கத்தோலிக்க இலக்கியக் கழகம், 1987, புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

ஆயர் அவர்களால் பதிபிக்கப்பெற்ற நூல்கள்.

1. பேதுரு புலவர், சந்தியாகு மாயோர் அம்மானை .1991, புனிதவளன கத்தோலிக்க அச்சகம்,யாழ்ப்பாணம்,

குறிப்பு: தற்போது ஆயர் அவர்கள் 17ஆம் நூற்றுண்டில் யாக்கப்பட்ட திருச்செல்வர் காவியம், திருச்செல்வர் அம்மானை போன்ற நூல்களை சில விளக்கவுரைகளுடன் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

### சகல துறைகளிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவத்தம்பியின் மணி விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது; இவர் கல்விப்பணி, இலக்கியப்பணி, சமுதாயப் பணி என்ற பல்வேறு மட்டங்களிலும் இனம் காட்டியவர் அவரிடமிருந்து இப்பணிகளில் கூடுதலான பணிகளை எதிர்பார்க்கின்றோம்.

இவர் இரவும் பகலும் தமிழுக்கு உழைப்பவர். ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணியளவில் கூட அவர் வீட்டில் போகும் போது வேறு சில கல்விமான்களுடன் தமிழ் அகராதியை ஆக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

விழாவுக்கு பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் தலைமை வகித்தார். திருவாளர்கள் டொமினிக் ஜீவா: சு. வைகுலிங்கம், இ. ஜெயராஜ், சிவ தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் பலர் பேசினர். (சு)

### அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவே அரசு பேராசிரியர் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கில என்னைச் சம்பந்தப்படுத்தியது.

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசிய ஜனநாயகமுன்னணித் தலைவர்களில ஒருவருமான திரு. காமினி திஸநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில கூறியதாவது:

1988ம ஆண்டு நடைபெற்ற சம்பவத்திற்கு 1992ஆம் ஆண்டு என்னை சம்பந்தப்படுத்தியது என்னை பழிவாங்கும் நோக்குடனேயாகும்.

இவ்வழக்கில் என்னை சம்பந்தப்படுத்தி மீண்டும் இலங்கைக்கு நான் வருவதை தடுக்கும் குறிக்கோளை அரசு கொண்டிருந்தது.

இலங்கையில் நடைபெற்ற மனிதஉரிமை மீறல்கள் பத்திரிகையாளர் றிச்சாட் டீ சொய்ஸா படுகொலை,மனிதர்களை உயிருடன் ரயர் போட்டு கொளுத்தி எரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பான உண்மைகள் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் என மூலமாக தெரியவரும் என்ற அச்சத்தின் காரணமாகவும் பேராசிரியர் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கில் அரசு என்னை சம்பந்தப்படுத்தியது என்றார். (மா)

### பவள் வெடித்தது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவசவாகனமொன்றிலும் வந்த விசேட அதிரடிப்படையினர் மீதே இக்கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டது.

இக்காவலரண் அம்பாறை தாண்டியடியிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்கும் கஞ்சிக்குடிச்சாறிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்கும் இடையிலுள்ளது.

விகாரமலை காவலரணிலிருந்து 500 யார் தூரத்தில் வைத்தே இக்கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டது.

தகர்க்கப்பட்ட கவச வாகனத்தில் 9 விசேட அதிரடிப படையினர் பயணம் செய்தனர் என்றும் இவர்களில் இருவர் பலியாகியதை விடுதலைப் புலிகள் உறுதிப்படுத்துமுள்ளனர்.

### பிலிப்பைன்ஸில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும், உள்ளூராட்சி அமைப்புகளுக்குமென மொத்தம் 17 ஆயிரத்து 284 பதவிகளுக்கு இன்று தேர்தல் நடைபெறுகிறது

இத்தேர்தலில் 3 கோடி 20 லட்சம் மக்கள் வாக்களிக்கவிருக்கிறார்கள். சுமார் 17 ஆயிரம் பதவிகளுக்கு 88 ஆயிரம் பேர் வேட்பாளர்களாக போட்டியிடுகிறார்கள்.

ஜனாதிபதி பதவிக்கு ஏழு பேர் போட்டியிடுகிறார்கள். இத்தேர்தலில் முக்கியபோட்டி நான்கு வேட்பாளர்களுக்கிடையில் என்று கூறப்படுகிறது முன்னாள் ராணுவ அமைச்சர் ராம்மோசா, செல்வந்தரான குவாங் குவாங் மரியம்சந்தியாகோ ஆகியோர் இதில் முக்கியமானவர்கள். (மா)

# பனம்பண்ணைகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றிய ஏற்பாட்டில், தெங்கு பனம் பொருள் உ. வி. கூ. சங்கங்கள், உற்பத்திக் குழுக்கள் இணைந்து கற்பக தரு பனம் பண்ணைகளை அமைத்து வருகின்றன. இம்முயற்சியின் கீழ் வற்றாப்பளைப் பகுதியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் பனம் விதைகள் நாட்டப்பட்டு பராமரிக்கப்படுகிறது. மாமூலைப் பகுதியிலும் இவ்வாறான பனம் பண்ணையை அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### கண்ணியில்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

இராணுவ முகாமிலிருந்து பாலர்தோப்பூ முகாமுக்கு படையினர் சென்றுகொண்டிருந்தபோதே புலிகள் வழிமறித்து கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்கள்.

மல்லிகைத்தீவிற்கும் பட்டித்திடலுக்கும் இடையேயான பகுதியில் வைத்து இக்கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது. (ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81